# கேள்வி:

## "தீர்க்கதரிசிகள் சபையைப் பற்றி என்ன கூறினார்கள்?"

# பதில்:

*இதுவரை அறிந்துள்ளபடி, பழைய ஏற்பாட்டின் எந்த தீர்க்கதரிசியும் "சபை" என்ற வார்த்தையை என்றைக்கும் பேசியதில்லை.[1] யோவான் ஸ்நானனும் கூட இதைப் பேசியதில்லை. ஆனால் யோவானும், தீர்க்கதரிசிகளும் சபையைப் பற்றிப் பேசியுள்ளனர். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் மற்றும் யோவானின் தீர்க்கதரிசனம் இவைகளின் நிறைவாக புதிய ஏற்பாட்டு சபை வந்தது, அதை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களுக்கு புதிய ஏற்பாட்டில், "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள்" என்று இடம் அளிக்கப் பட்டுள்ளது (அப். 3:21).*

*அப். 3ல் பேதுருவால் பேசப்படும் "மறு சீரமைப்பு" என்பது பாபிலோனியப் படையெடுப்புக்குப் பின் யூதர்கள் மறுபடியும் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பியதைக் குறிப்பதில்லை. அந்தப் படையெடுப்புக்கு எழுபதாண்டுகளுக்குப் பிறகு அந்த மறுசீரமைப்பு உண்டாயிற்று (எரே. 25:11) எனவே அது கி.மு. 606-536ல் நடந்து முடிந்த ஒரு செயலாகும் (எஸ்றா 1:2 காண்க).*

*மேலும், மறுசீரமைப்பின் காலம் தொடங்கும் வரைக்கும் சபையானது காலங்களினூடாக இடம் பிடித்திருக்க வேண்டும் என்பதாகப் பேதுரு கூறவில்லை. சபை(அவரது இராஜ்யம்) யானது பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும் போது (1 கொரி. 15:24), மறு சீரமைப்பு எதுவும் இருக்காது. அதற்கு மாறாக, வானமும் பூமியும் எரிந்து அழிந்து விடும் (2 பேது. 3:10, 11; வெளி. 21:1) அவைகள் மறு சீரமைக்கப் படாது. எல்லாமே "புதியதாகும்" (வெளி. 21:5).*

*இல்லை, சபையானது கி.பி. 30 தொடக்கம் உலகத்தின்*

*முடிவு பரியந்தம் மறு சீரமைக்கும் காலங்கள் முடிவுறும் வரையில் காலங்களினூடே இடம் பிடித்திருக்கும். சபை ஆரம்பித்த நாள் முதலே மறு சீரமைப்பு பணி நடந்தது, நடந்து கொண்டுள்ளது, இயேசு வரும்வரை நடக்கும். யோவானின் பணியும் மறு சீரமைப்புப் பணியாகவே இருந்தது. எலியாவின் ஆவியைக் கொண்டு அவர் எல்லாவற்றையும் மறு சீரமைத்தார். "பிதாக்களின் இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்குத் திருப் பினார்" மற்றும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்குத் திருப்பினார் (மத். 17:11-13; லூக். 1:17). இதே விதத்தில், இயேசு தமது சபையின் மூலமாக ஒரு மறு சீரமைப் புப் பணியையே செய்கின்றார். அவர் ஜனங்களை இருளி லிருந்து வெளிச்சத்துக்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திருப்புகிறார் (அப். 26:18). பேதுருவால் அப். 3:21ல் கூறப்பட்ட "நிறைவேறித் தீருங்காலங் கள்" என்பது ஆவிக்குரிய மறு சீரமைப்புதானே தவிர சரீரத்திற் குரியதல்ல. இது சுவிசேஷப் பிரசங்கத்தினால் நடந்தேறுகிறது (ரோமர் 1:16) மற்றும் இதன் விளைவாக "சபை" என்றழைக்கப் படும் அழைக்கப்பட்ட மக்கள் கூட்டம் உருவாகிறது. "நிறைவேறித் தீருங்காலங்கள்" வருமளவும் இயேசுவைப் பரலோகம் ஏற்றுக் கொள்ளும். உண்மையில், "சாமுவேல் முதற்கொண்டு, எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார் களோ, அத்தனை பேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார் கள்" (அப். 3:24). "இந்த நாட்கள்" என்ற சொற்றொடரானது, கி.பி. 30ல் பேதுரு பிரசங்கித்தபடி கிறிஸ்துவின் மறுவருகைக் குப் பிந்திய காலம் அல்ல என்பது உறுதி. ஏனெனில் அதன் பிறகு நாட்கள் இருப்பதில்லை.*

*கி.பி. 30ல் பேதுருவால் தரப்பட்ட மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், எல்லாக் கிறிஸ்தவர்களும் "தீர்க்கதரிசி களுக்கும், தேவன் அவர்கள் பிதாக்களுடன் பண்ணின உடன் படிக்கைக்கும் புத்திரர்களாயிருக்கிறார்கள்" என்பதே. தேவன், ஆபிரகாமின் சந்ததிக்குள் பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (அப். 3:25). தவறாத வேத வசனத்தின் பலத்தை ஆழப்படுத்தும் ஒரு அனுபவமும், உறுதியான விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் அனுபவமும் பேதுரு தமது பிரசங்கத்திற்கு ஆதாரமாக எடுத்துக்கொண்ட தீர்க்கதரிசன வார்த்தைகளை மறுகண் ணோட்டம் செய்யக் கூடும்.*

# ஆதியாகமத்தில் தீர்க்கதரிசனங்கள்

**முதலாவது சுவிசேஷ அறிவிப்பின் காலம்**

*முதலாவது சுவிசேஷ அறிவிப்பு ஏதேன் தோட்டத்தில் பேசப்பட்டது. தேவன் ஆதி. 3:15ல் ஸ்திரீயின் வித்து - கிறிஸ்து (மத். **1:23** மற்றும் கிறிஸ்தவர்கள் (ரோமர் 16:20) - சாத்தானின் வித்து, சாத்தான் (எபி. 2:14; 1 யோவா. 3:8) ஆகியோர்மேல் வெற்றி கொள்வார்கள். ஆதி. 3:15ல் விளக்கப்பட்ட இந்த நம்பிக்கையானது அநேக நூற்றாண்டுகளில் ஏராளமான மக்களுக்கு உற்சாகமளித்துள்ளது.*

**ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்கள்**

*ஸ்திரீயின் ஆவிக்கேற்ற சந்ததியின் (காயீன் அல்ல சேத்தின்) மூலம் வந்த ஆபிரகாமிடத்தில் தேவன் தமது நித்திய நோக்கத்தை நிறைவேற்றத் தகுதிகள் இருந்ததைப் பார்த்தார் (ஆதி. 12:1-3). ஆபிரகாம் எவ்விதம் உண்மையான தேவனிடத்தில் விசுவாசமுள்ளவரானார் என்பது தெளிவாக அறியப்படவில்லை. அவருடைய தகப்பன் (தேராகு) ஒரு விக்கிரகாராதனைக்காரராக இருந்தார் (யோசு. 24:2). இருப்பினும், அவருடைய முற்பிதாக்களில் ஒருவராகிய சேம் என்பவர் தேவனைத் தொழுது கொள்பவராக இருந்தார் (ஆதி. 9:26). ஆபிரகாமின் முதல் 150 ஆண்டுகள் வாழ்க்கையில் சேம் உயிருடனிருந்தார், எனவே அவர் ஆபிரகாமின் இருதயம் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள வைத்திருக்கக்கூடும். எப்படி இருப்பினும், தேவன்மேல் ஆபிரகாம் கொண்ட பக்தியானது, பரலோகத்தில் நிறைவடையக் கூடிய (மத். 8:11) வாக்குத்தத்தங்களின் ஊற்றுக்களை தேவன் அவருக்கு அருளும் அளவுக்கு பலமாயிருந்தது. ஆபிரகாமின் சந்ததிக்குள் (ஆதி. 22:18) - பதினெட்டு நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கிறிஸ்துவே அந்த சந்ததி ஆவார் (கலா. 3:16) - பூமியிலுள்ள சகல குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி. 12:3). இந்நாட்களில், கிறிஸ்துவுக்குள் உள்ள யூதர்கள் மற்றும் புறஜாதியார் யாவரும் ஆவிக்குரிய வகையில் ஆபிரகாமின் சந்ததியாகவும் வாக்குத்தத்தின்படி சுதந்தரராகவும் உள்ளனர் (கலா. 3:29).*

**யூதாவுக்கு வாக்குத்தத்தம்**

*பரலோகத்தின் திட்டங்களுக்கு ஒத்திசையும் வகையில்,*

*ஆபிரகாமின் சந்ததியில் வந்த யூதா, கிறிஸ்துவின் முற்பிதாவா யிருப்பார் என்று முன்னுரைக்கப்பட்டது. இந்த முன்னு ரைப்பில் கிறிஸ்து, ஷீலோ (''சமாதான கர்த்தர்'') என்றும் இராஜா (செங்கோல் ஏந்தி, நியாயப்பிரமாணத்தைக் கூறுபவர்) என்றும் விளக்கப்படுகின்றார்: "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை. நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்'' (ஆதி. 49:10). ஷீலோவுக்கு கீழ்ப்படிகிற "ஜனங்கள்" இயேசுவால் அழைக்கப் பட்டவர்களே (மத். 16:18, 19).*

# "சாமுவேல் மற்றும் அவருக்குப் பின் வந்தவர்களின்" தீர்க்கதரிசனங்கள்

### சாமுவேலால் பதிவான தீர்க்கதரிசனம்

*அப். 3:24ல் பேதுரு, புதிய ஏற்பாட்டு சபையின் "இந்த நாட்களை''ப் பற்றி முன்னுரைத்தவர்களில் ஒருவரான சாமுவேலைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறார். 2 சாமு. 7:16ல் வீடு மற்றும் இராஜ்யம் என்ற விளக்கத்தில் சபை காணப் படுகிறது. அந்த வீடு எழும்புவது உறுதி, அது நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் என்பதாகக் கூறப்பட்டது. இந்த தீர்க்கதரிசன வெளிச்சத்தின் பின்னணியில், புதிய ஏற்பாட்டில் சபையைப் பற்றி விளக்குவதற்கு வீடு, மற்றும் இராஜ்யம் என்ற வார்த்தை பயன்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை (1 தீமோ. 3:15; மத். 16:19).*

### தாவீதின் தீர்க்கதரிசனம்

*சாமுவேல், இஸ்ரவேலின் இராஜ வம்சமாக தாவீதை அபிஷேகம் செய்வித்தார். தேவன் தாவீதை ஒரு தீர்க்கதரிசி யாக்கி (அப். 2:30) புதிய ஏற்பாட்டின் அழைக்கப்பட்ட மக்களைப்பற்றிய மிக முக்கியமான அம்சத்தைக் கூற வைத்தார்: "உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர் களாயிருப்பார்கள் ..." (சங். 110:3). மனந்திரும்பாத தேசங்கள், நியாயத்தீர்ப்பின் நாளில் மேசியாவின் கோபாக்கினையின் கோலை உணர்வார்கள் (சங். 2:9; வெளி. 19:15). அவருடைய சொந்த ஜனங்கள், அழைக்கப்பட்ட கூட்டம் பரிசுத்த*

*வாழ்க்கை என்ற அலங்காரத்துடன் அவரைத் தாமாகவே சேவிப்பார்கள்.*

**ஏசாயாவின் தீர்க்கதரிசனம்**

*தனக்கு முன்பிருந்த வேறு எந்த தீர்க்கதரிசியைக் காட்டிலும், ஏசாயாவால் கர்த்தருடைய சபையை அது உண்டாவதற்கு எட்டு நூற்றாண்டுகள் முன்னதாகவே தெளிவாகக் காண முடிந்தது. "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" என்று (ஏசா. 2:2) புதிய ஏற்பாட்டின் சபையைக் குறிப்பிட அவர் கட்டளை பெற்றிருந்தார். அதற்குள் சகல ஜாதிகளும் ஓடி வருவார்கள் என்றும் அவர் கூறினார். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சபையை மலையென்றும், ஆலய மென்றும் இயல்பாக விளக்குவதை நாம் காண்கின்றோம். எபி. 12:22ல், "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத் திற்கும் ..." (எபி. 3:6ஐ மேலும் காண்க) என்று கூறுகின்றது.*

*எருசலேம் நகரம்தான் சபை ஆரம்பிக்கும் இடமாயிருக்கும் என்று முன்னுரைக்க ஏசாயா அதிகாரம் பெற்றிருந்தார் (ஏசா. 2:3). இதற்குச் சரியாக ஒத்திசையும் வகையில், இயேசு தமது நாமத்தினால் பிரசங்கிக்கும் வல்லமையைப் பெறும்வரைக்கும் தமது அப்போஸ்தலர்களை எருசலேமில் தங்கியிருக்கும்படி கூறினார் (லூக். 24:46-49). இதே போல, இந்த தீர்க்கதரிசனத் திற்கு ஒத்திசையும் வகையில், வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து பக்தியுள்ள மக்கள் (அப். 2:5), அப்போஸ்தலர்கள் அறிவித்த செய்தியைக் கேட்டு சபையில் இணைந்தனர் - அது கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைப் பற்றிய நற்செய்தியாகும் (அப். 2:36). இதன் விளைவாக, சரீரமாகிய சபைக்குள் மூவாயிரம் பேர் ஞானஸ்நானத்தின் மூலம் பிரவேசித்தனர் (அப். 2:41; 1 கொரி. 12:13; கொலோ. 1:18). அந்த சபையின் அங்கத்தினர்களுக்கு, "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்" பொழியப்பட்டது (ஏசா. 55:3). அவர்களுக்கும், இன்றைக்குள்ள கிறிஸ்தவர்களுக்கும் மாபெரும் ஆசீர்வாதங்கள் உரியதாயுள்ளது. பூர்வ நாட்களி லிருந்தே மனிதர்கள் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை என்றுமே கேட்டதோ, பார்த்ததோ அல்லது யோசித்ததோ கூடக் கிடையாது (ஏசா. 64:4; 1 கொரி. 2:9). ஆனால் அவை யாவும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உண்மையாயிற்று.*

### *எரேமியாவின் தீர்க்கதரிசனம்*

*புதிய ஏற்பாட்டின் சபையினுடைய "அந்த நாட்கள்" குறித்து எரேமியாவும் கூட வித்தியாசமான உருவகத்தைப் பயன்படுத்தி முன்னுரைத்துள்ளார். பரிசுத்த ஆவியானவர் அவருக்கு ஒரு ஏவப்பட்ட ஒப்புவமையைத் தந்தார்: சரீரப் பிரகாரமான இஸ்ரவேலரும், யூதாவும் எகிப்திலிருந்து கிளம்பியபோது கர்த்தரிடத்திலிருந்து ஒரு உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்டனர். இந்த உடன்படிக்கையானது கற்பலகையிலும், பாப்பிரஸ் என்ற தாளிலும் எழுதப்பட்டது, ஆனால் ஆவிக்குரிய இஸ்ரவேலரும், யூதாவும் தங்கள் இருதயம் மற்றும் சிந்தனைகளில் எழுதப்பட்ட புதிய உடன்படிக்கையைப் பெறுவார்கள் (எரே. 31:31-34; எபி. 8:6-13ஐக் காண்க). முழுமையான நிறைவின்போது, அப்போஸ்தலர்களின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் இருதயங்களாகிய சதைப் பலகைகளில் எழுதினதின் விளைவாக தேவனுடைய சபை உண்டாயிற்று. 2 கொரி. 3:3ல் பவுல், கிறிஸ்தவர்களிடம், "நீங்கள் எங்கள் ஊழியத்தினாலுண்டான கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள். ... அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலும் எழுதப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.*

### *தானியேலின் தீர்க்கதரிசனம்*

*சபை ஆரம்பமாவதற்கு அறுநூறு ஆண்டுகள் இருக்கும் போது, சிறைப் பிடிக்கப்பட்டவராகிய தானியேல் என்ற மனிதரை தேவன் ஒரு தீர்க்கதரிசியாகப் பயன்படுத்தி அவருக்குப் பின் வந்த அந்த அறுநூறு ஆண்டுகளைப் பற்றியும் அவரைத் தரிசனம் காணச் செய்தார். ரோம ராஜ்யத்தைச் சுட்டிக் காட்டும் வகையில், மாபெரும் இராஜ்யங்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் பற்றி தானியேல் பேசினார். அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் கைகளால் கட்டப்படாத, ஆனால் நித்தியத்திற்கும் நிலைத்திருக்கக்கூடிய இராஜ்யத்தை நிர்மாணிப்பார் என்ற தீர்க்கதரிசனம் சொல்ல அவர் வல்லமை பெற்றிருந்தார் (தானி. 2:44; எபி. 12:28). அந்த இராஜ்யத்தின் குடிமக்களே புதிய ஏற்பாட்டின் சபையார் ஆவர் (கொலோ. 1:1, 2, 13).*

**யோவானின் தீர்க்கதரிசனம்**

*கி.பி. 30ல் சபை ஆரம்பமாவதற்கு முன்னரே, தேவன், யோவான் என்ற தீர்க்கதரிசியை எழுப்பினார். கர்த்தருக்காக ஜனங்களை ஆயத்தப்படுத்துவதே அவர் பணியாயிருந்தது (லூக். 1:17). ஜனங்களை மனந்திரும்பி, வரப்போகிற மேசியாவை விசுவாசித்து, அவர்கள் பாவத்தை நீக்குவதற் கென்று ஞானஸ்நானம் பெறும்படி அழைத்தார் (மத். 3:2; மாற். 1:4). சிலர், யோவானின் காலத்திலேயே சபை இருந்தது (தயாரிப்பில் இருந்தது) என்றும், ஜனங்கள் அதற்குள் பலவந்தமாய்ப் பிரவேசித்தார்கள் (லூக். 16:16) என்றும் கூறுவார்கள். ஆயினும், உண்மையில் யோவானின் நாட்களில் சபை இல்லை; அவரே அதில் அங்கத்தினராகும் சிலாக்கியத் தைப் பெற்றிருக்கவில்லை (மத். 11:11). தாவீது, வெட்டிய கற்களை ஆயத்தம் செய்து வைக்க பின்னால் சாலமோன் ஆலயம் கட்டுவதற்கு அவைகளைப் பயன்படுத்தியது போலவே, யோவான் ஆவிக்குரிய கற்களை ஆயத்தம் செய்து வைக்க, கிறிஸ்து அவைகளைத் தமது ஆலயமாகிய, சபைக்குப் பயன்படுத்தினார்.[2]*

**காலத்தின் நிறைவேற்றம்**

*யோவானின் காலம் வரைக்கும் நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் அமலில் இருந்தன (மத். 11:13). அதன் பிறகு உச்ச நிலை ஏற்பட்டு, காலத்தின் நிறைவேற்றம் பற்றிய திட்டமானது - தேவனுடைய இராஜ்யம், அவரது வீடு, அவரது பர்வதம், அவரது ஜனங்கள், அவரது சபை ஸ்தாபிதம் பெற்றது! வரப்போகிறதாயிருந்த இந்த சபையைப் பற்றி பழைய ஏற்பாட்டில் சாமுவேல் முதல் மல்கியா வரைக்கும் உள்ள தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரும் கூறியவற்றைப் பார்த்தால் நமக்குப் பிரமிப்பு உண்டாகிறது! "காலம் நிறைவேறின போது" (கலா. 4:5), அவருடைய அநாதி தீர்மானத்தின்படி (எபே. 3:11), தேவனுடைய ஆராய்ந்தறிய முடியாத ஞானத்தின் ஐசுவரியமாகிய ஆழம் மனித குலத்திற்கு வெளியாயிற்று!*

## முடிவுரை

*கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? (ரோமர் 11:34ஐக் காணவும்). அவரால், அவர் மூலம், அவருக்கென்று நாம்*

*அனைவரும், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இருக்கின்றோம்!*

---

**குறிப்புகள்**

[1] "Church" *என்ற ஆங்கில வார்த்தை இடைக்கால ஆங்கில வார்த்தையான* chirche *என்பதிலிருந்து பெறப்பட்டது, இந்த வார்த்தை பழங்கால ஆங்கில வார்த்தையான cyrice என்பதில் இருந்தும், அது ஜெர்மன் வார்த்தையான Kirche என்பதிலிருந்தும், அது கிரேக்க வார்த்தையான cyriacon என்பதிலிருந்தும் பெறப்பட்டதாகும். Cyriacon என்றால், "சார்ந்திருக்க" என்று பொருள் ஆகும். புதிய ஏற்பாட்டில் cyriacon என்ற வார்த்தை இருமுறை மட்டுமே உள்ளது. முதலாவது, கர்த்தருடைய பந்திக்காகக் கூடுதல் (1 கொரி. 11:20). இரண்டாவதாக கர்த்தருடைய நாளுக்காக (வெளி. 1:10). பின்னால், இந்த வார்த்தை கர்த்தருடைய வீட்டுக்குரியவைகளுக்காக பயன்பட்டது, எனவே "church" என்ற ஆங்கில வார்த்தை "கர்த்தருடைய வீடு" என்ற பொருள் தருவதாயுள்ளது. தீர்க்கதரிசியாகிய யோவானால் முன்னுரைக்கப்பட்டு, இயேசுவால் அழைக்கப்பட்ட ஜனங்களைக் குறிக்க இயேசு பயன்படுத்திய வார்த்தையான எக்லேஸியா என்பது "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று பொருள் தருகிறது. எனவே இவ்வுலக மக்கள் யாவரும் அசுத்தமானவைகளிலிருந்து வெளியேறி, எல்லாவற்றிலும் அவருடைய கர்த்தத்துவத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்ற இயேசுவின் அழைப்பிற்கு ஒப்புக் கொடுக்கிற இவ்வுலக மக்கள் யாவரும் அவரது எக்லேஸியா ஆவார்கள். வெளியே அழைக்கப்பட்ட அவருடைய குழுவே சபை.* [2]*யோவான் ஞானஸ்நானம் கொடுத்தவர்களுக்கு மறு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதாக வேதாகமத்தின் எந்தப் பதிவுகளிலும் கூறப்படவில்லை. அப்படி ஒரு தேவை இருக்குமென்றால், அது யோவான் தனக்குக் கட்டளையிடப்பட்ட ஊழியத்தை அதாவது கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவதை (லூக். 1:17) சரியாகச் செய்யவில்லையென்றே பொருள் தருகிறது. மேலும் அது தேவையென்றால், பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு அதைப்பற்றி வழிகாண்பித்து இரண்டாம் முறை ஞானஸ்நானம் பெற்றிருப்பார். இருபத்து நான்கு வருடங்களுக்குப் பிறகு, எபேசுவில் ஒருவர் (ஒருவேளை அப்பொல்லோவாக இருக்கலாம்) மேசியா வந்து பாடுபட வேண்டும் என்ற யோவானின் எதிர்பார்ப்புச் செய்தியைப் பிரசங்கித்து பன்னிரெண்டு பேரை ஞானஸ்நானப் படுத்தினார் (அப். 19:1-4). இவர்கள் கி.பி. 54ல் அறியாமையில் ஞானஸ்நானம் பெற்றனர். கி.பி. 30லேயே மேசியா வந்து அவர்களுக்காக மரித்ததை அவர்கள் அறியவில்லை. இதன் விளைவாக, அவர்கள் சத்தியத்தை அறிந்தபோது, அவர்கள் மறுபடி ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயிற்று. கி.பி. 30க்கு முன்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறு ஞானஸ்நானம் பெற்றனர் என்ற குறிப்பை எங்குமே நாம் காண்பதில்லை.*